**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:- திரு. எஸ். பிரகதீஸ்வரன்,M.A., B.L.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

I.A.No. 05/ 2022 in O.S.No.242/2016

1) நல்லப்பெருமாள்

2) இந்திராணி

3) அன்புராணி

4) ஜோதிமலர்

5) அழகுராஜா

6) சசிகலா

7) இளயராணி ...வாதிகள்

**/எதிர்/**

1) ராமசாமி

2) வட்டாச்சியர், கடவூர்

3) கோட்டாச்சியர், குளித்தலை

4) மாவட்ட ஆட்சியர், கரூர்

5) கிராம நிர்வாக அலுவலர், பண்ணபட்டி ..... பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 16.03.2023 ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.M. செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. நாகேஸ்வரன் முன்னிலையாகியும், 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**ஆணையுரை**

மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1. மனுதாரர் வழக்கின் 7 ம் வாதி. தாவா வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எனது வீட்டில் பழைய Record-ல் இருந்து தற்சமயம் கிடைக்கப்பெற்றதால், இந்த ஆவணம் தாவா வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்பதால் மேற்படி தாவாஅசல் வழக்கில் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்ய கோரும் ஆவணங்களானது வாதி தரப்பு வழக்கிற்கு அவசியமானதாகும். எனவே மேற்படி ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது தாக்கல் செய்வதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்</u>**

2. இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்பதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரர் தனது வீட்டில் பழைய ரெக்கார்டில் இருந்து தற்சமயம் கிடைக்கப்பெற்றதால் இந்த ஆவணம் வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்று சொல்லியுள்ளது ஏற்கதக்கதல்ல. மனுதாரர் மேற்படி மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் வழக்கு நடவடிக்கையை காலம் கடத்தும் நோக்குடன் தற்போது தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக நிலுவையில் இருந்த நிலையில் வாதி தரப்பில் கூடுதல் ஆவணம் தாக்கல் செய்ய அனுமதிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. வழக்கு விசாரணையை காலம் கடத்தும் நோக்குடன் மேற்படி மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

6. ஒரு வழக்கில் வழக்குரை தாக்கல் செய்யும் போதே வாதி தரப்பு ஆவணங்கள் அனைத்தும் தாக்கல் செய்யப்படவேண்டுமென்றும், அவ்வாறு தாக்கல் செய்யாத சமயத்தில் உரிய காரணம் தெரிவித்தால் அந்த ஆவணங்களை ஏற்றுக்கொள்ளலாம் என உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மனுதாரர் தாக்கல் செய்யக்கோரும் ஆவணம் வழக்கிற்கு தேவையா இல்லையா என்பதை பொறுத்து வழக்கு விசாரணை முடிவில் தான் தீர்மாணம் செய்ய இயலும். எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S PRAGATHEESHWARAN

Digitally signed by S PRAGATHEESHWARAN
DN: cn=S PRAGATHEESHWARAN, ou=TIRUNELVELI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

| | | |
|---|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

S PRAGATHEESHWARAN

Digitally signed by S PRAGATHEESHWARAN
DN: cn=S PRAGATHEESHWARAN, ou=TIRUNELVELI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**